# சவாலாக மாறியுள்ள ரூபாய் நோட்டும் டொலரும்

எம்.எம்.மின்ஹாஜ்

நாட்டின் வளர்ச்சிக்கு பொருளாதார வளர்ச்சி மிகவும் அத்தியாவசியமாகும். இலங்கை வரலாற்றில் தற்போது மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதற்கு தற்போதைய அரசாங்கத்தின் தவறானதும் சீரற்றதுமான பொருளாதார கொள்கையே காரணம் என்றால் அது மிகையாகாது. டொலர் தட்டுப்பாடும் ரூபாய் நோட்டு அச்சிடலும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணமாக அமைந்துள்ளது. மாற்றத்தை ஏற்படுத்த வந்த அரசாங்கம் பொருளாதார வளர்ச்சியை எக்காலத்திலும் காணமுடியாத மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளமை வாக்களித்த மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது. ஏமாற்றம் மாத்திரமின்றி முழு நாட்டு மக்களின் வாழ்க்கையை தலைகீழாக மாற்றியுள்ளது.



### வரலாற்று சவால்கள்

இலங்கையில் வருடாந்த வரவு செலவு பற்றாற்குறை நிவர்த்தி செய்ய முடியாத ஒரு பிரச்சினையாக உள்ளது;. சுமார் 40 வருடங்களுக்கும் மேலாக நாட்டின் வருமானத்தை விட செலவு அதிகமாக உள்ளது. அதே போன்றுதான் ஏற்றுமதி வருமானத்தை விடவும் இறக்குமதிக்கான செலவு பன்மடங்காக உள்ளமை இலங்கை வரலாற்றில் பொருளாதார துறை வளர்ச்சிக்குள்ள பிரதான சவாலாகும். அத்தோடு சர்வதேச மற்றும் உள்நாட்டு கடன் மற்றும் வட்டி; இலங்கை பொருளாதாரத்தை; இடியப்ப சிக்கலுக்குள் நுழைய செய்வதற்கான பிரதான காரணமாக அமைந்துள்ளது;. எனவே எல்லைமீறிய கடனும் இலங்கையின் வளர்ச்சிக்கு தடையாக உள்ள பிரதான சவாலாகும்;. வரலாற்றில் 1977 ஆம் ஆண்டே வரவு செலவு பற்றாகுறை 4.7 வீதமாக பதிவானது. இதுவே இலங்கையின் வருமானத்திற்கும் செலவுக்கும் இடையிலான இடைவெளியின் குறைந்த பதிவாகும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஆட்சிக்காலப்பகுதியில் ஒரு தடவை வரவு செலவு பற்றாகுறை 5.7 வீதமான பதிவான போதும்; நிதி அமைச்சர் மங்கள சமரவீர காலப்பகுதியில் குறைந்த வரவு செலவு பற்றாகுறை பதிவானது. 2017 ஆம் ஆண்டில் வரவு செலவு பற்றாகுறை 5.4 வீதமாக குறைந்தது. இதற்கு இறக்குமதி கட்டுப்பாடும் சீரான பொருளாதார கொள்கையுமே பிரதான காரணமாக அமைந்தது.

அத்தோடு மொத்த தேசிய உற்பத்தியில் வருமான வீதம் 120 வீதமாக பதிவாக வேண்டும். எனினும் இலங்கையின் வருமான வீதம் 1011 வீதமாக உள்ளது. மேலும் மொத்த தேசிய உற்பத்தியில் செலவு வீதம் 20 வீதமாக பதிவாகிறது. குறித்த செலவுகளில் 16 வீதம் அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம், கடன் மற்றும் அதற்கான வட்டி செலுத்துவதற்கு செலவிடப்படுகின்றன. இது மாற்றம் செய்ய முடியாத செலவுகளாகும். ஏனைய மிகுதியையே அபிவிருத்திக்காக பிரயோகம் செய்ய வேண்டியுள்ளது. ஆகவே பொருளாதார பிரச்சினை தீர்க்க நாட்டின் உற்பத்தியும் வருமானமும் அதிகரிக்கப்பட வேண்டும். இதுவே வரலாற்றில் இருந்து இலங்கை என்ற தீவின் பொருளாதார வளர்ச்சிக்குள்ள பிரதான சவால்களாகும். உற்பத்தியை அதிகரிப்பதனை கொண்டே ஏற்றுமதியை சிறந்த நிலைக்கு கொண்டு வரமுடியும். ஏற்றுமதி துறையில் வளர்ச்சி ஏற்பட்டால் வருமானம் அதிகரிக்கும் அதனைக் கொண்டு டொலர் கையிருப்பை அதிகரிக்க முடியும். அதன்போது இறக்குமதியை சீராக முன்னெடுக்க முடியும்.

### தற்போதைய நெருக்கடி

வரலாற்றில் பொருளாதார நிலைமை சீரற்றதாக காணப்பட்ட போதிலும் அப்போதைய அரசாங்கங்கள் அவ்வாறான நிலைமைகளை சீரான முகாமைத்துவத்துடன் துரிதமாக அனுகினர். டொலர் தட்டுப்பாடுகளோ, அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடுகளோ ஏற்படவில்லை. பணவீக்கம் ஏற்பட்ட போதிலும் அது படுமோசமான நிலைக்கு தள்ளப்படவில்லை. எனினும் தற்;போதைய பொருளாதார நெருக்கடிக்கு தற்போதைய அரசாங்கமே பொறுப்பும் காரணமும் என்று கூறுவதற்கு பல காரண காரணிகள் உள்ளன. தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த கையோடு தனது வர்த்தக பங்காளிகளுக்கு வரி சலுகை வழங்கி தேசிய வருமான துறைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தில் அரைவாசி இழந்தது. ஆட்சிக்கு வந்த கையோடு அரசாங்கம் செய்த தவறுகளில் ஆரம்பமே குறித்த வரிசலுகையாகும். அடுத்த கையோடு இறக்குமதிகளுக்கு கட்டுப்பாடுகள் விதித்தமை பிரதான காரணங்களில் ஒன்றாகும். இறக்குமதி கட்டுப்பாடுகளில் பெரும் பாதிப்பை செலுத்தியது அத்தியாவசிய பொருட்களுக்கான கட்டுப்பாடுகளும் இரசாயண உரத்தின் மீதான இறக்குமதி தடையுமாகும். மேலும் டொலர் தட்டுப்பாட்டை போக்குவதற்கு உரிய தீர்வினை நோக்கி விரைவாக நகராமை மிக முக்கிய காரணமாகும்.

அதாவது டொலர் பிரச்சினையை தீர்ப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தை அனுக வேண்டும். இதனை கொண்டு டொலர் தட்டுப்பாட்டை ஓரளவுக்கு தீர்க்க முடியும். அத்தோடு சர்வதேச கடனை செலுத்துவதற்கு கால அவகாசம் கோரி கடன் தவணை செலுத்துவதை பிற்போட வேண்டும். அதனை கொண்டு அந்நிய செலாவணி கையிருப்பை தக்க வைத்துக்கொள்ள முடியும். எனினும் அவ்வாறான துரித நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் செல்லாமையே தற்போதைய பொருளாதார நெருக்கடி வலுவாக காரணமாகும்.

### ரூபாய் நோட்டு அச்சிடல்

ஆனால் நெருக்கடிகளை தீர்க்க முடியுமான பல காரணிகள் இருக்கையில் அவற்றை முன்னெடுக்காமல் தவறான வழிமுறைகளை தற்போதைய அரசாங்கம் தீர்வாக எடுத்தமை நெருக்கடியை மேலும் வலுவாக காரணமாக அமைந்துள்ளது. அரசாங்கத்தை குறித்த வழிமுறை நெருக்கடியை தீர்க்க முடியாத நிலைக்கு தள்ளியுள்ளது. அதுதான் ரூபாய் நோட்டு அச்சிடுவதாகும். பியகம பொருளாதார ஏற்றுமதி வலயத்திலுள்ள தியாறு லங்கா என்ற நிறுவனத்திலேயே இலங்கை மத்திய வங்கியின் ரூபாய் நோட்டுகள் அச்சிடப்படுகின்றன. இதன்படி 2021 ஆம் ஆண்டு முழுவதும் 1400 பில்லியன் ரூபாய் நோட்டு அச்சிடப்பட்டுள்ளன. அத்தோடு இவ்வருடத்தின் ஜனவரி 26 ஆம் திகதி மாத்திரம் 26 பில்லியன் ரூபாய் நோட்டு அச்சிடப்பட்டுள்ளன. மேலும் இவ்வருட காலப்பகுதியில இது வரை 146 பில்லியன் ரூபாய் நோட்டுகள் அச்சிடப்பட்டுள்ளன. இவ்வாறு நோட்டு அச்சிடுவதன் காரணமாக நாட்டில் அத்தியாவசிய பொருட்களுக்கான விலை பன்மடங்கு அதிகரித்துள்ளன. இதன் காரணமாக ரூபாய் பெறுமதி குறைந்து பணவீக்கம் உச்சத்தை தொட்டுள்ளது. அதாவது கடந்த ஆண்டின் டிசம்பர் மாதமளவில் பணவீக்கம் 12 வீதமாக அதிகரித்திருந்தது. ஆனால் ஜனவரி மாதமளவில் பணவீக்கம் 14 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதற்கு பணம் அச்சிடப்படுவதே காரணமாகும்.

ரூபாய் நோட்டு அச்சிடுவதன் காரணமாக டொலர் தட்டுப்பாட்டை நீக்க முடியாது. எனினும் குறுகிய அரசியல் நலனுக்காக மக்களுக்கு சலுகை வழங்கவும் வீதி அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்கவும் இவ்வாறு நோட்டு அச்சிடப்படுகின்றது. மேலும் நோட்டு அச்சிடல் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக மத்திய வங்கியின் கொடுப்பனவு இருப்பு பற்றாகுறை 3961 மில்லியனாக பதிவாகியுள்ளது. பணம் அச்சிடுவதன் காரணமாக சந்தையில் கடந்த ஆண்டுடன் விலைவாசியை ஒப்பிடும் போது பன்மடங்கு அதிகரித்துள்ளது.

மரக்கறிகளின் விலைகள் 80–90 என்ற வீதத்தில் அதிகரித்துள்ளன. அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அனைத்தும் 50–90 வீதத்தில் அதிகரித்துள்ளன. பணம் அச்சிட்டுவதே உணவு விலைச்சுட்டெண் மற்றும் பணவீக்கம் அதிகரிக்க பிரதான காரணமாக அமைந்துள்ளது.

### டொலர் தட்டுப்பாடு

ரூபாய் நோட்டு அச்சிடுவதன் காரணமாக இலங்கை; ரூபாயின் பெறுமதி குறைந்து டொலரின் பெறுமதி 250 ரூபாவாக அதிகரித்துள்ளது. மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ அறிவிப்பின் பிரகாரம் டொலரின் பெறுமதி 200 ரூபாவாக இருந்த போதும் கறுப்பு சந்தையிலும் புறக்கோட்டையிலும் டொலரின் பெறுமதி 250 ரூபாவாக உள்ளது. இவ்வாறான நிலைமையின் காரணமாக வங்கிகளின் ஊடாக 200 ரூபாய்க்கு டொலர் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.; இதன்காரணமாக ஏற்றுமதி இறக்குமதி துறைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் அந்நிய செலாவணி கையிருப்பில் டொலருக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகின்றது. டொலர் இல்லாத காரணத்தினால் இறக்குமதி செய்வதற்கு வங்கிகளில்; கடன் சான்று பத்திரங்களை திறக்க முடியாத நிலை இறக்குமதியாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அந்நிய செலாவணி கையிருப்பில் நவம்பர் மாதத்தில் 1.5 பில்லியன் டொலரே காணப்பட்டது. அதன்பின்னர் சீனாவிடம் இருந்து கிடைக்கப்பெற்ற 1.5 பில்லியன் டொலர் அந்நிய செலாவணி கையிருப்பில் சேர்ந்தமையினால் மொத்த டொலர் கையிருப்பு டிசம்பர் மாதமளவில் 3.1 பில்லியன் டொலராக அதிகரித்தது. இவ்வருடத்தின் ஜனவரி மாதமளவில் டொலர் கையிருப்பில் 2.3 பில்லியன் டொலர் எஞ்சியது. இந்த மாதமளவில் இரு தடவைகள் கடன் செலுத்தப்படுமானால் டொலருக்கு நெருக்கடிகள் ஏற்படும். பெப்ரவரி 9 ஆம் திகதியன்று 70 மில்லியன் டொலர் கடன் செலுத்த வேண்டும். பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதியன்று 170 மில்லியன் டொலர் கடன் செலுத்த வேண்டும்.

ஆனால் அரசாங்கம் கடன் செலுத்துமாக இருந்தால் டொலருக்கு தட்டுப்பாடு ஏற்படும். அவ்வாறாயின் 3 வாரங்களுக்கே டொலர் போதுமாகும். தற்போது அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய 1500 கொள்கலன்கள் விடுவிக்கப்படாமல் துறைமுகத்தில் உள்ளன.

எனவே வரலாற்றில் இதுவரை இல்லாத பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணுவதற்கு பதிலாக அரசாங்கம் நாட்டை அதள பாதாளத்தை நோக்கி தள்ளிவிட்டுள்ளது. இன்னும் பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டவில்லை. சர்வதேச நாணய நிதியத்தை அணுகுவதனை கொண்டும் கடன் செலுத்துவதனை பிற்போடுவதனை கொண்டும் டொலர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என எதிர்க்கட்சிகள் பலமுறை வலியுறுத்திய போதும் அதற்கு எந்தவொரு பதிலும் அரசாங்கத்திடம் இல்லை. நாட்டை கட்டியெழுப்புவதற்கான எந்தவொரு வேலைத்திட்டமும் அரசாங்கத்திற்கு இல்லை. ஆகவே பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு வழங்காத நிலையில் இலங்கை என்ற நாடு சோமலியாவை முந்திவிடும் என்பதே கசப்பான உண்மையாகும்.